**ஏப்ரல் – 24**

# TNPSC துளிகள்

- இந்திய இரயில்வேயானது மாநிலங்களில் அதிகரித்து வரும் ஆக்சிஜன் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக நாடு முழுவதும் மருத்துவத்திற்கான திரவ ஆக்ஸிஜன் மற்றும் ஆக்ஸிஜன் உருளைகளை பசுமை இரயில் பாதைகள் வழியாகக் கொண்டு செல்லும் 'ஆக்ஸிஜன் விரைவு இரயில்களை' இயக்க உள்ளது.
  - இந்த இரயில்களின் வேகமான இயக்கத்தை உறுதி செய்வதற்காக பசுமை இரயில் பாதைகள் உருவாக்கப் படுகின்றன.
- மகரிஷி வால்மீகியின் காவியமான ராமாயணம் குறித்த முதல் இணையவழிக் கண்காட்சியை சுற்றுலா மற்றும் கலாச்சாரத் துறை அமைச்சர் பிரஹலாத் சிங் படேல் அவர்கள் திறந்து வைத்தார்.
  - இந்தக் கண்காட்சியானது புதுதில்லியில் உள்ள தேசிய அருங்காட்சியகத்தின் 49 மிகச் சிறிய அளவிலான (மினியேச்சர்) ஓவியங்களைக் காட்சிப்படுத்தும்.
- இந்திய விவசாயிகள் கூட்டுறவு உரங்கள் உற்பத்தி நிறுவனமானது குஜராத், உத்தரப் பிரதேசம் மற்றும் ஒடிசா ஆகிய மாநிலங்களில் நான்கு ஆக்ஸிஜன் ஆலைகளை நிறுவ உள்ளது.
  - மருத்துவ ஆக்ஸிஜன் ஆலையானது புல்பூர் (உத்தரப் பிரதேசம்), கலோல் (குஜராத்) மற்றும் பாரதீப் (ஒடிசா) ஆகிய இடங்களில் அமைக்கப் படும்.
- ஆந்திரப் பிரதேசத்திலுள்ள விசாகப்பட்டினம் எஃகு ஆலையிலிருந்து மகாராஷ்டிர மாநிலத்திற்கு திரவ ஆக்சிஜனை அனுப்புவதற்கான முதல் ஆக்சிஜன் விரைவு இரயிலானது (ஆக்சிஜன் எக்ஸ்பிரஸ்) நவி மும்பையிலிருந்து புறப்பட்டது.

# தமிழ்நாடு செய்திகள்

## சேம்பியன்ஸ் ஆப் சேஞ்ச் விருது 2020 - மு.க.ஸ்டாலின்

- திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் மு.க.ஸ்டாலினுக்கு 'சேம்பியன்ஸ் ஆப் சேஞ்ச் விருது - 2020' என்ற விருது வழங்கப்பட்டது.
- இவ்விருதானது இந்தியப் பொருளாதாரம் மீதான ஊடாடும் மன்றம் என்ற அமைப்பு சார்பாக வழங்கப் பட்டது.
- இது கோவா மாநிலம் தாஜ் விடுதி & சமூக நல மையத்தில் நடைபெற்ற ஒரு விழாவில் கொடுக்கப்பட்டது.
- அவருடைய சமூக நலத் திட்டங்களுக்காக இவ்விருது வழங்கப்பட்டுள்ளது.

# தேசியச் செய்திகள்

## புத்திசாலியாக உண்தல் நகரங்கள் சவால்

- இதை வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரஞ்களுக்கான அமைச்சகம் அறிமுகப் படுத்தியது.
- இந்தியாவின் சரியாக உண் என்ற திட்டத்தின் கீழ் பல்வேறு முயற்சிகளை மேற்கொள்வதற்கும் அளவிடுவதற்கும் நகரங்கள் மேற்கொண்ட முயற்சிகளை அங்கீகரிப்பதற்கான ஒரு போட்டியாக இந்த சவால் கருதப்படுகிறது.

- அனைத்துப் பொலிவுறு நகரங்கள், ஒன்றியப் பிரதேசங்கள் / மாநிலங்களின் தலைநகரங்கள் மற்றும் 5 லட்சத்துக்கும் அதிகமான மக்கள் தொகை கொண்ட நகரங்கள் இந்தச் சவாலில் பங்கேற்கலாம்.




# பொருளாதாரச் செய்திகள்

## மெகா உணவுப் பூங்கா

- சமீபத்தில் இத்தாலியானது, குஜராத்தின் மெஹ்சானா மாவட்டத்தில் உள்ள ஃபனிதர் என்ற நகரில் அதன் முதல் "மெகா உணவுப் பூங்காவை" அறிமுகப் படுத்தியது.
- இது நாட்டில் தொடங்கப்பட்ட முதல் இத்தாலிய-இந்திய உணவுப் பூங்கா திட்டமாகும்.
- மெகா உணவுப் பூங்கா என்பது உணவுப் பதப்படுத்தும் துறை அமைச்சகத்தினால் செயல்படுத்தப்படும் ஒரு திட்டமாகும்.
- பண்ணைகளில் இருந்து பதப்படுத்துதல் மற்றும் நுகர்வோர் சந்தைகளுக்கு நேரடி இணைப்பை ஏற்படுத்துவதே இந்தத் திட்டத்தின் ஒரு முக்கிய நோக்கமாகும்.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## கரீபியன் எரிமலையிலிருந்து சல்பர் டை ஆக்சைடு

- கரீபியனில் எரிமலை வெடிப்பிலிருந்து (La Soufriere volcano eruption) சல்பர் டை ஆக்சைடு (SO2) என்ற உமிழ்வானது 2021 ஆம் ஆண்டு ஏப்ரல் 16 ஆம் தேதி அன்று இந்தியாவை அடைந்தது.
- இது நாட்டின் வடக்குப் பகுதிகளில் மாசின் அளவை அதிகரித்து அமில மழையை ஏற்படுத்தும் என்ற அச்சத்தைத் தூண்டி உள்ளது.
- இதை உலக வானிலை அமைப்பு உறுதிப்படுத்தி உள்ளது.
- பூமியின் வளிமண்டலத்தின் இரண்டாவது அடுக்கான படையடுக்கு மண்டலத்தில் சல்பேட் தூசிப் படலத் துகள்கள் (sulphate aerosol particles) நுழைந்ததற்கான ஆதாரங்களையும் விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர்.
- ஏரோசோல்கள் சூரியனில் இருந்து வரும் கதிர்வீச்சைப் பிரதிபலித்து மீண்டும் அதை விண்ணிற்கு அனுப்பி, பூமியின் கீழடுக்கு மண்டலத்தைக் குளிர்விக்கின்றன.
- புதைபடிவ எரிபொருட்களை மின் உற்பத்தி நிலையங்கள் மற்றும் பிற தொழில்துறை நிறுவனங்கள் எரிப்பதே வளிமண்டலத்தில் SO2 வெளிப்படுவதற்கு ஒரு மிகப்பெரிய ஆதாரமாக உள்ளது.

## வட்டுவடிவ கால் கொண்ட வெளவால்

- இந்தியாவில் முதல்முறையாக மூங்கிலில் வசிக்கும் ஒட்டும் தன்மை கொண்ட வட்டுகளையுடைய வெளவாலை மேகாலயாவில் கண்டறிந்து உள்ளது.
- இது மேகாலயாவின் நோங்கிலெம் வனவிலங்குச் சரணாலயத்தில் (Nongkhyllem Wildlife Sanctuary) காணப்பட்டுள்ளது.
- வட்டுவடிவ கால் கொண்ட வெளவால் ஆனது மேகாலயாவின் வெளவால் இனங்களின் எண்ணிக்கையை 66 ஆக உயர்த்தியுள்ளது, இது இந்தியாவின் எந்த மாநிலத்தை விடவும் அதிகமாகும்.



## ஒளி மாசுபாடு

- செயற்கைக் கோள்களிலிருந்து வரும் ஒளி மாசுபாடானது வானியல் அச்சுறுத்தலை ஏற்படுத்துகிறது என்பதை ஆராய்ச்சியாளர்கள் சமீபத்தில் கண்டறிந்துள்ளனர்.
- பூமியைச் சுற்றி வரும் செயற்கைக் கோள்கள் மற்றும் விண்வெளிச் சிதைவுகளானது இரவு நேர வானத்தின் பிரகாசத்தை அதிகரிக்கும்.
- இரவு நேர வானத்தின் ஒட்டு மொத்தப் பிரகாசமானது புவிக் கிரகத்தின் இயற்கை ஒளி மட்டங்களை விட 10 சதவீதத்திற்கும் அதிகமாக அதிகரிக்கப் படும்.
- இத்தகைய ஒளி மாசுபாடு நமது பிரபஞ்சத்தை அவதானிக்கும் வானியலாளர்களின் திறனைத் தடுக்கக் கூடும்.
- பூமியைச் சுற்றி 9,200 டன்களுக்கும் அதிகமான விண்வெளிப் பொருட்கள் உள்ளன.
- விண்வெளிச் சிதைவுகள் ஒன்றோடு ஒன்று மோதும் அபாயத்தை ஏற்படுத்துவதோடு மட்டுமல்லாமல், மற்ற விண்வெளிப் பொருட்களுடன் சேர்ந்து ஒளி மாசுபாட்டிற்குப் பங்களிக்கிறது.
- விண்வெளிப் பொருட்களிலிருந்துப் பிரதிபலிக்கப்பட்டுச் சிதறடிக்கப்பட்ட சூரிய ஒளியானது பூமியில் இருக்கும் தொலைநோக்கிகளால் மேற்கொள்ளப்படும் அவதானிப்புகளில் கோடுகளாகத் தோன்றும்.
- இது இரவு நேர வானில் விண்வெளி பொருட்களின் ஒட்டுமொத்தத் தாக்கத்தை மதிப்பீடு செய்யும் முதல் ஆராய்ச்சியாகும்.
- முன்னதாக இரவு நேர வானில் வானியலாளர்களின் படங்களைப் பாதிக்கும் தனிப்பட்ட செயற்கைக் கோள்கள் மற்றும் விண்வெளிச் சிதைவுகளின் தாக்கம்

பகுப்பாய்வு செய்யப்பட்டது.

- இதன் ஆராய்ச்சியாளர்கள் ஸ்லோவாக்கியாவில் உள்ள கொமினியஸ் என்ற பல்கலைக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் ஆவர்.



### அனல் மின் நிலையங்களுக்கான விதிமுறைகள்

- இந்த விதிமுறைகளை மத்திய சுற்றுச்சூழல் அமைச்சகமானது இப்போது திருத்தி உள்ளது.
- இது 2015 ஆம் ஆண்டில் துகள்மப் பொருட்கள், சல்பர் டை ஆக்சைடு மற்றும் நைட்ரஜனின் ஆக்சைடுகளுக்கான உமிழ்வு அளவுகளை அறிவித்து இருந்தது.
- இவற்றை 2017 ஆம் ஆண்டில் மின் நிலையங்கள் பின்பற்ற வேண்டுமென அது விதித்து இருந்தது.
- இது இப்போது தேசிய தலைநகரப் பிராந்தியத்தின் 10 கிலோமீட்டருக்குள் உள்ள பகுதிகளில் மற்றும் 10 லட்சத்துக்கும் அதிகமான மக்கள் தொகை கொண்ட நகரங்களில் 2022 ஆம் ஆண்டின் இறுதிக்குள் புதிய உமிழ்வு விதிமுறைகளுக்கு இணங்க வெப்ப மின் நிலையங்களை அனுமதிக்கிறது.
- நைட்ரஜன் (NOx), சல்பர் டை ஆக்சைடு (SO2) மற்றும் துகள்மப் பொருட்கள் (PM) ஆகியவற்றின் ஆக்சைடுகள், நிலக்கரியை எரிக்கும் மின் உற்பத்தி நிலையங்களிலிருந்து வரும் முதன்மை மாசுபடுத்திகளாகும்.
- நாட்டில் மொத்த தொழில்துறை உமிழ்வுகளில் துகள்மப் பொருட்களின் 60 சதவீதம்; SO2 உமிழ்வின் 45 சதவீதம் ; NOx உமிழ்வின் 30 சதவீதம்; மற்றும் பாதரச உமிழ்வின் 80 சதவீதம் போன்ற அதிகமான உமிழ்வுகளுக்கு அனல் மின் நிலையங்கள் காரணம் ஆகின்றன.
- மேலும் அனைத்துத் தொழில்துறை நிறுவனங்களாலும் எடுக்கப்படும் மொத்த நன்னீரில் 70 சதவீதத்திற்கு மேற்கூறிய அனல் மின் நிலையங்கள் பொறுப்பாகும்.


## பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

### சார்லஸ் கெஷ்கே

- அடோப்பின் இணை நிறுவனரான சார்லஸ் கெஷ்கே தனது 81வது வயதில்

அமெரிக்காவின் கலிபோர்னியாவில் காலமானார்.

- உலகின் மிகப் பரவலாகப் பயன்படுத்தப்படும் கோப்பு வடிவமான PDF (Portable Document Format) என்ற மென்பொருளை உருவாக்க இவர் உதவினார்.
- கெஷ்கே 1982 ஆம் ஆண்டில் ஜான் வார்னாக் உடன் இணைந்து அடோப் நிறுவனத்தை நிறுவினார்.
- கெஷ்கே பரவலாக சக் (Chuck) என்று அழைக்கப்பட்டார்.
- 1990 ஆம் ஆண்டுகளில், வார்னாக் "கேம்லாட் திட்டம்" என்று அழைக்கப்படும் ஒரு திட்டத்தை முன்னெடுத்து நடத்தினார்.



## நடிகர் விவேக்

- தமிழ் திரைப்பட நடிகர் விவேக் அவர்கள் சமீபத்தில் தனது 59 வயதில் காலமானார்.
- 2009 ஆம் ஆண்டில், இந்திய அரசானது அவரின் கலைக்கான பங்களிப்புக்காக பத்மஸ்ரீ விருதை வழங்கியது.
- என்.எஸ். கிருஷ்ணனின் (கலைவாணர்) வழி வந்த இவர் சின்னக் கலைவாணர் என்று அழைக்கப் பட்டார்.
- இந்திய முன்னாள் ஜனாதிபதி ஏ. பி. ஜே. அப்துல் கலாம் அவர்களின் வழிகாட்டுதலின் கீழ் 2010 ஆம் ஆண்டில் விவேக் அவர்கள் பசுமை கலாம் என்ற திட்டத்தைத் தொடங்கினார்.
- நெகிழி மாசுபாடு இல்லாத தமிழகத்திற்கான பிரச்சாரம் என்பதற்கான ஒரு தூதராக அவர் நியமிக்கப் பட்டார்.



# முக்கிய தினங்கள்

## 2021 சீனியர் ஆசிய மல்யுத்தப் போட்டி

- இது கஜகஸ்தானின் அல்மாட்டியில் நடத்தப் பட்டது.
- இது 34வது பதிப்பாகும்.
- இதில் பதக்கப் பட்டியலில் மூன்றாவது இடத்தில் இடம் பெற இந்தியா 14 பதக்கங்களை வென்றது.
- இதில் 5 தங்கம், 3 வெள்ளி மற்றும் 6 வெண்கலப் பதக்கங்கள் அடங்கும்.
- ஈரான் மற்றும் கஜகஸ்தான் தலா 17 பதக்கங்களுடன் முதலிடத்தில் உள்ளன.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★